1996 ஆகஸ்ட் 20]

ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை --

மாண்புமிகு திரு என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) கங்கை கொண்ட சோழபுரம் ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கங்கை கொண்ட சோழபுரத்தை மாவட்ட உலாத்தல திட்டத்தில் சேர்த்து அங்கு ஓய்வில்லம், குடிநீர் வசதி செய்ய புல எண் 81/4-ல் சுமார் 30 சென்ட் கோவிலுக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்ற சென்னை பொதுப்பணித்துறை (கட்டிடம்) தலைமைப் பொறியாளரிடம் மாதிரி வரைப்படம் மற்றும் வடிவமைப்பு கோரப்பட்டுள்ளது. இப்பணியினை செயல்படுத்த சென்னை இந்து சமய அறநிலைய ஆணையாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

48--

கோடிக்யகரையை சுற்றுலா மையமாக மேம்படுத்துதல்

வினா எண் *1304*--**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேதாரண்யம் தொகுதி, கோடியக்கரை, சுற்றுலா மையமாக மேம்பாடு செய்யப்படுமா?

விடை --

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

வேதாரண்யம் தொகுதி, கோடிக்கரையை சுற்றுலா மையமாக மேம்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49--

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத்திட்டம்

வினா எண் *143*--**திரு. வீ. தமிழ்மணி** : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கடந்த ஐந்து ஆண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திட்டத்தின் கீழ் பயன் பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை--

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் பயன்பெற்றோர் எண்ணிக்கை பின்வருமாறு:--

வருடம்.	பயனாளிகளின் எண்ணிக்கை.	செலவிடப்பட்ட தொகை. ரூ.
1990-91	*23,000*	*11,50,00,000*
1991-92	*10,100*	*5,05,00,000*
1992-93	*10,000*	*5,00,00,000*
1993-94	*13,129*	*6,56,45,000*
1994-95	*10,000*	*5,00,00,000*
1995-96	*10,000*	*5,00,00,000*

50--

மீனவர்களுக்கு விடுகள் கட்டுதல்

வினா எண் *1430*--**திரு. இரா. மதிவாணன்** : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மீனவர்களுக்காக வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்பட உள்ளது?

விடை--

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்.